பக்கங்கள்:-22

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆனி 13 | புதன்கிழமை | 26.06.2024 | அதிர்வு 330

## கோர விபத்தில் ஒன்றரை வயது குழந்தை மரணம்!

கோர விபத்தில் ஒன்றரை குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

06



## அரசமைப்பு சபையின் முடிவைப் புறந்தள்ளி

# சட்டமா அதிபரின் சேவை நீடிப்பு!

## ஜனாதிபதி ரணில் அதிரடி

சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினத்தின் சேவைக்காலத்தை நீடித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட அனுமதியை வழங்கியுள்ளார் என்று அறியமுடிகின்றது.

சட்டமா அதிபரின் பதவிக் காலம் நாளையுடன் நிறைவடையவுள்ளது. அதேசமயம் ஏற்கனவே அவருக்காக ஜனாதிபதி மேற்கொண்ட சிபாரிசை நிராகரித்த அரசமைப்பு சபை இன்று விசேட கூட்டமொன்றை நடத்தவுள்ளது.

06

# ரணில் – பஸில் சந்திப்பு இனிமேல் நடைபெறுமா?



நாட்டின் தற்போதைய அரசியல் நிலவரம் தொடர்பிலும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நிறுவுநர் பஸில்

06



நாட்டின்நிதிநிலைமை சரியில்லை, அதனால் உள்ளூராட்சித் தேர்தலுக்கு ஆயிரம் கோடி ரூபா நிதி ஒதுக்க முடியாது என்று தெரிவித்து, கடந்த ஒன்றரை வருடங்களாக அந்தத் தேர்தலை இடைநடுவில் தடுத்து வைத்திருக்கும் நாட்டின் அதிஉத்தமர், நாடு வங்குறோத்து நிலையிலிருந்து மீண்டு விட்டது என்று அறிவிக்கப் போகின்றாராம். பெரும் வேடிக்கையாக இல்லை...?

உள்ளூராட்சித் தேர்தலுக்கு ஆயிரம் கோடி ரூபா வழங்க முடியாதவர், இப்போது ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் மக்களுக்கு வாரிக் கொட்டும் திட்டங்களை அறிவிக்கின்றார். செயற்படுத்துகின்றார்.

மாகாண சபை தேர்தல்களுக்கு 06

# இலங்கை வரலாற்றில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே பெண்கள் வலுவூட்டலுக்கான சட்டத்தைக் கொண்டு வந்தார்

## மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவிப்பு



"இலங்கையின் அரசியல் வரலாற்றில் பெண் உரிமைகள், பெண்களுக்கான சம அந்தஸ்து தொடர்பான எந்தவொரு சட்டமூலமும் கொண்டு வரவில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பெண்கள் வலுவூட்டலுக்கான சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது"

– இவ்வாறு மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"பெண்கள் வலுவூட்டல் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இலங்கையின் அரசியல் வரலாற்றில், பெண்களின் உரிமைகள் அல்லது பெண்களுக்கு சம அந்தஸ்த்து வழங்குவதற்கான எந்த சட்டமும் கொண்டு வரப்படவில்லை. இந்தச் சட்டத்தின் மூலம், பெண்களை வலுவூட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காக, பெண்களின் முன்னேற்றத்திற்கான ஒரு தேசியக் கொள்கை தயாரிக்கப்படும்.

இந்த சட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவுக்கமைய கொண்டுவரப்பட்டுள்ளது. சட்ட வரைவின் போது பல திருத்தங்கள் செய்யப்பட்டன. நாடாளுமன்ற மகளிர் மன்றமும் அதற்கான பரிந்துரைகளை வழங்கியது. அதன்படி, சட்டத்தில் பல அத்தியாவசிய மற்றும் முக்கியமான விடயங்களைச் சேர்த்துக்கொள்ள முடிந்தது.

மேலும், தேசிய பெண்கள் ஆணைக்குழுவை அமைத்தல் மற்றும் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான பொறிமுறையை நிறுவுதல் உள்ளிட்ட விடயங்களோடு, பெண்களின் உரிமை மீறல்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கான வாய்ப்பும் உள்ளது. எனவே, இந்த சட்டம் பெண்களை வலுவூட்டுவதாக அமைந்துள்ளது.

பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் களைவதற்கான இணக்கப்பாட்டிற்கு அமைவாக அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ள பொறுப்புக்களைச் செயற்படுத்தும் பொறிமுறையொன்றை அறிமுகப்படுத்த வேண்டும். இதனால் பாலினம் மற்றும் பாலியல் அடிப்படையிலான பாகுபாட்டிலிருந்து பாதுகாப்பதற்கும், துன்புறுத்தல்களைத் தடுப்பதற்குமான ஏற்பாடுகளையும் செய்ய முடியும்." – என்றார்.

## யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின்

# கடமை நிறைவேற்று அரச அதிபர்கள் பதில் அரச அதிபர்களாக நியமனம்!

## நிர்வாக சேவை தொழிற்சங்கம் போர்க்கொடி

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் கடமை நிறைவேற்று அரச அதிபர்கள், பதில் அரச அதிபர்களாகப் பணியாற்ற அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ம.பிரதீபனும், கிளிநொச்சி மாவட்டத்தில் எஸ்.முரளிதரனும் (நிர்வாக சேவை தரம் 1 ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்கள்) தற்போது கடமை நிறைவேற்று அரச அதிபர்களாகப் பணியாற்றும் நிலையில் பதில் அரச அதிபர்களாக நியமிப்பதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளது.

இவ்வாறு வழங்கிய அனுமதிக்கான நிகழ்ச்சி நிரல் மிக இரகசியமாக நகர்த்தப்பட்டபோதும் அமைச்சரவைக் கூட்டத்தில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மிகக் கடுமையாக எதிர்த்தார். ஆனால், வடக்கின் அமைச்சரவை அமைச்சரின் விடா முயற்சியால் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வழங்கிய தவறான அனுமதி தொடர்பில் விரைவில் ஜனாதிபதியுடன் இடம்பெறும் நிர்வாக சேவை தொழிற்சங்கத்தின் சந்திப்பில் பிரஸ்தாபிக்கப்பட்டு தீர்வு எட்ட முயற்சிக்கப்படவுள்ளது. அதற்குத் தீர்வு கிட்டாத நிலையில் மாற்று வழி தொடர்பில் ஆராயப்படும் என்று நிர்வாக சேவை தொழிற்சங்கத்தின் வடக்கு மாகாண மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# ஜனாதிபதித் தேர்தல் நிச்சயம்! நான் வெற்றி பெறுவது உறுதி!!

## நீதி அமைச்சர் விஜயதாஸ தெரிவிப்பு

"உரிய நேரத்தில் ஜனாதிபதித் தேர்தல் நிச்சயம் நடத்தப்படும். அதில் நான் நிச்சயம் போட்டியிடுவேன் என்பதுடன் அதில் வெற்றி பெறுவதும் உறுதி."

– இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

"ஜனாதிபதித் தேர்தலில் நான் நிச்சயம் போட்டியிடுவேன் என்பதுடன் அதில் வெற்றி பெறுவதும் உறுதி. அவ்வாறு வெற்றி பெற்ற பின்னர் எனக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்குகள் எல்லாம் அரசமைப்பின் பிரகாரம் வலுவற்றதாகிவிடும். இதனால் கட்சித் தலைமைத்துவம் தொடர்பிலும் பிரச்சினை எழாது.

ஜனாதிபதித் தேர்தலை பிற்போட எவருக்கும் இடமளிக்கமாட்டோம். அரசமைப்புடன் விளையாட எவருக்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது. எனவே, உரிய நேரத்தில் ஜனாதிபதித் தேர்தல் நிச்சயம் நடத்தப்படும். அது தொடர்பில் அச்சம் கொள்ள வேண்டியதில்லை." – என்றார்.




# இளைஞர் விரும்பும் எதிர்கால இலங்கையை உருவாக்க பரந்தளவிலான கருத்தாடல்களை ஆரம்பிக்க வேண்டும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

இளம் தலைமுறையினர் விரும்பும் எதிர்கால இலங்கையை உருவாக்குவது தொடர்பில் நாடு முழுவதும் பரந்துபட்ட உரையாடல் ஆரம்பிக்கப்பட வேண்டும். நாட்டில் புதிய பொருளாதாரத்தை உருவாக்குவதற்கு புதிய பயணமொன்றை மேற்கொள்ள வேண்டும்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் ஏற்பாட்டில் அம்பாறை எச்.எம். வீரசிங்க விளையாட்டரங்கில் நடைபெற்ற இளைஞர் சந்திப்பில் ஜனாதிபதி கலந்துகொண்டார். இதன்போது அவர் கருத்துத் தெரிவிக்கையில் –

“திருகோணமலையில் இளைஞர் சேவைகள் மன்றத்திற்குச் சொந்தமான 200 ஏக்கர் காணியில் ஒரு பகுதியை சுற்றுலாத் துறைக்காகவும், எஞ்சிய பகுதியை நிரந்தர இளைஞர் கிராமத்தை உருவாக்குவதற்கும் வழங்க எதிர்பார்க்கின்றேன். அதன்படி, அடுத்த இரண்டு ஆண்டுகளில் உங்களது பொழுதுபோக்கிற்காக தாராளமாகப் பயன்படுத்தும் வகையில் இளைஞர் கிராமம் தயாராகும் என்றே கூற வேண்டும்.

இந்த ஆண்டு பொசன் போயா தினம் மக்களால் மிகவும் உற்சாகமாக கொண்டாடப்பட்டது. அநுராதபுர புனித பூமிக்கு மட்டும் 10 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் வந்திருந்தனர். அதற்கு முன்னர் வெசாக் பண்டிகையை முன்னிட்டு சுமார் 20 லட்சம் மக்கள் கொழும்புக்கு வந்திருந்தனர். தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் புத்தாண்டு கொண்டாட்டங்கள் இடம்பெற்றன. இந்த ஆண்டு இலங்கையில் பொசொன் முன்னிட்டு 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தன்சல்கள் வழங்கப்பட்டன. சில ஆண்டுகளுக்குப் பிறகு மக்கள் இந்த விழாக்களை சுதந்திரமாக கொண்டாட முடிந்தது.

இதுவரை நாட்டினதும் தங்களினதும் எதிர்காலம் தொடர்பில் மக்கள் பயந்தனர். நாட்டில் தங்குவதா அல்லது வெளிநாடு செல்வதா என்பதை அவர்களால் தீர்மானிக்க முடியவில்லை. கடந்த 4 ஆண்டுகளில் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது. நாட்டில் மின்சாரம் இருக்கவில்லை. உணவு, மருந்து, எரிபொருள் எதுவும் இருக்கவில்லை. அனைத்து வியாபாரங்களும் வீழ்ச்சியடைந்தன. அதன்படி, எங்களின் எதிர்காலம் குறித்து மிகுந்த அச்சம் ஏற்பட்டது. கொரிய தூதரகத்திற்கு அருகே வேலை வாய்ப்புக்காக இளைஞர்கள் பெருமளவில் திரண்டனர். மற்றொரு குழு சவூதி அரேபியா செல்ல தயாரானது. ஆனால் தற்போது நமது முயற்சியால் நாட்டின் பொருளாதாரம் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி வருகிறது.

எதிர்வரும் வாரத்தில் எமக்கு கடன் வழங்கிய நாடுகளுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு கடனை செலுத்தும் பலம் கொண்ட

தொடர்ச்சி▼

























# இளைஞர் விரும்பும் எதிர்கால இலங்கையை உருவாக்க பரந்தளவிலான கருத்தாடல்களை ஆரம்பிக்க வேண்டும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

தொடர்ச்சி▲

நாடாக இலங்கை மாறும். அதன்படி, எங்களுக்கு அந்நியச் செலாவணி, உதவி மற்றும் வெளிநாட்டு முதலீடுகள் கிடைக்கும். அதன் மூலம் புதிய பயணத்தை ஆரம்பிக்கலாம்.

இந்தப் புதிய பயணத்தை எப்படிச் செல்ல வேண்டும் என்பதை நீங்கள்தான் தீர்மானிக்க வேண்டும். கடன் வாங்கும் பழைய முறைக்கே திரும்பினால் இன்னும் 15 ஆண்டுகளில் மோசமான பொருளாதாரச் சரிவைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

இந்த நாட்டில் புதிய பொருளாதாரத்தை உருவாக்க நாம் புதிய பயணத்தை மேற்கொள்ள வேண்டும். ஜப்பான், வியட்நாம், சீனா, கொரியா, மலேசியா, தாய்லாந்து மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகள் ஒவ்வொன்றும் ஏற்றுமதிப் பொருளாதாரத்திற்கு மாறியுள்ளன. ஆரம்பத்தில், இந்த நாடுகள் நம் நாட்டை விட வறுமை நிலையில் இருந்தன. ஆனால் இன்று அந்த நாடுகள் பெரும் முன்னேற்றம் கண்டுள்ளன.

நம் நாட்டில் திறமையான இளைஞர்கள் உள்ளனர். ஆனால் அவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. ஏற்றுமதிப் பொருளாதாரத்தை உருவாக்குவதன் மூலம் அந்நியச் செலாவணியை எவ்வாறு ஈட்டுவது என்பதை நாம் சிந்திக்க வேண்டும். இந்தப் பயணத்தில் நாம் அனைவரும் ஒன்றாகச் செல்ல வேண்டும்.

நமக்கான எதிர்காலத்தை தயாரிப்பதல்ல எமது பொறுப்பு, இளைஞர்களாகிய உங்களுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவது தான் எமது பொறுப்பு. ஒரு நாட்டை முன்னெற்றுவதற்கு 20 ஆண்டுகள் ஆகும். அதனால் தான் நாம் சுதந்திரமடைந்து 100 ஆண்டுகள் நிறைவடையும் போது 2048 ஆம் ஆண்டளவில் இலங்கை ஒரு வளர்ந்த நாடாக மாற்ற வேண்டும் என்று அறிவித்தோம். சிலர் எங்களை அவமதித்தனர்.

2047 இல் இந்தியா சுதந்திரம் அடைந்து 100 ஆண்டுகள் கடந்துவிடும். அதன்படி, 2047 இற்குள் வளர்ந்த

தொடர்ச்சி▼










# இளைஞர் விரும்பும் எதிர்கால இலங்கையை உருவாக்க பரந்தளவிலான கருத்தாடல்களை ஆரம்பிக்க வேண்டும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

தொடர்ச்சி▲

இந்தியாவை உருவாக்க வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி கூறினார். 2047இல் வளர்ந்த இந்தியாவை உருவாக்கும் போது, நாம் அனைவரும் ஒன்றிணைந்து 2048 இல் வளர்ச்சியடைந்த இலங்கையை உருவாக்குவோம். அதற்குத் தேவையான அடித்தளத்தை அமைப்பதைத்தான் இப்போது நாம் செய்து கொண்டிருக்கிறோம். எனவே, நாட்டின் எதிர்காலம் குறித்து கலந்துரையாட வேண்டும். என்னுடைய எதிர்காலமோ, இங்குள்ள அமைச்சர்களின் எதிர்காலமோ அன்றி உங்கள் எதிர்காலம்தான் தீர்மானிக்கப்படுகிறது.

1977 இல் ஜே.ஆர். ஜெயவர்தன எனக்கு எதிர்காலம் தேவையில்லை, உங்கள் எதிர்காலத்தை நீங்களே உருவாக்குங்கள் என்று கூறினார். அதன்படி, இளைஞர் சேவை மன்றம் நிறுவப்பட்டது. இளைஞர் கிராமம் நிறுவப்பட்டது. ஆடைத் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன. சுற்றுலாத் துறை கட்டியெழுப்பப்பட்டது. யுத்தம் இல்லை என்றால், சுற்றுலாத் துறை பெரிதும் மேம்பட்டிருக்கும். பின்னர் நாடு பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைந்தது. நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும். அதற்கு அனைவரும் இணைய வேண்டும். நாம் அனைவரும் ஒன்றிணைந்து நீங்கள் விரும்பும் எதிர்காலத்தை உருவாக்குவோம்.

அதற்கான விரிவான உரையாடலைத் தொடங்குமாறு இளைஞர் விவகார அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன். நாம் பழைய நிலைக்கு திரும்ப முடியாது. எண்ணெய் மற்றும் உரம் இல்லாமல் நாம் மீண்டும் கஷ்டப்பட முடியாது. மக்களுக்கு ஒரு சிறந்த எதிர்காலம் அவசியம். அதற்காக நாம் அனைவரையும் ஒன்றிணையுமாறு அழைக்கிறேன்."– என்றார்.










## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நிரந்தரமாக ஆப்படித்தவரும் அவர்தான்.

உள்ளூராட்சித் தேர்தல்களுக்கு வேட்டு வைத்தவரும் அவரேதான்.

என்னதான் அவர் வீரம் கதைத்தாலும், 'தேர்தல் என்றாலே தொடங்கி நடுங்கிதான்' என்ற அவரைப் பற்றிய விமர்சனம் முற்றிலும் உண்மை.

\+ + +

கனடாவில் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்துக்கு ஓர் இடைத்தேர்தல் நடந்து முடிந்திருக்கின்றது.

தமிழர்களுக்கு அதிகம் பரிச்சயமான ரொறன்ரோவில் செனட் போல்ஸ் தொகுதியில்தான் தேர்தல். ஆளும் லிபரல் கட்சிக்கு எதிர்பாராத தோல்வி. அது பற்றிய செய்தி நேற்று மாலை முரசு வெளியாகிவிட்டது. அந்தத் தேர்தலை ஒட்டி சுவாரசியமான சில விடயங்கள் உண்டு.

ஒரு லட்சத்து 16 ஆயிரத்து 953 பேர் வதியும் அந்தத் தொகுதியில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் 84 ஆயிரத்து 934 பேர். நேற்று முன்தினம் வாக்களித்தவர்கள் ஆக 36 ஆயிரத்து 962 பேர் மட்டுமே. அவர்களில் 15 ஆயிரத்து 555 வாக்குகளை மட்டுமே பெற்றவர் எம்.பியாகி விட்டார்.

வாக்குச் சீட்டுகளைக் கையால் எண்ணும் முறைமைதான் அங்கு. ஆனால் வாக்குகளை எண்ணி முடிக்க நீண்ட நேரம் - பல மணித்தியாலங்கள் - எடுத்தன.

என்ன, ஏது என்று விசாரித்துப் பார்த்தால், வாக்கு எண்ணுவதற்கு நேரம் செல்லவில்லை. மடித்துப் போடப்பட்ட வாக்குகளை பிரித்து எடுக்கத்தான் அதிக நேரம் தேவைப்பட்டது.

ஏன் தெரியுமா? வாக்குச் சீட்டின் நீளம் 3 அடி. அகலம் ஓர் அடி. வாக்கை அளித்தவர்கள் அதனை மடித்துப் பெட்டியல் போடும்படி கேட்கப்பட்டிருந்தனர். 36 ஆயிரம் வாக்குகளையும் மடிப்பு நீக்கி அடுக்க நீண்ட நேரம் எடுத்தது.

ஏன் இவ்வளவு பெரிய வாக்கு சீட்டு என்று கேட்கின்றீர்களா? கனடாவின் சரித்திரத்தில் இத்துணை நீண்ட பட்டோலை போன்ற வாக்குச்சீட்டு முன்னர் எப்போதும் இருந்ததில்லை. இம்முறை இவ்வளவு பெரிய வாக்குச் சீட்டுக்குக் காரணம் இந்த இடைத்தேர்தலில் மொத்தம் 84 பேர் போட்டியிட்டமைதான். அவர்களில் ஒருவருக்கு ஒரு வாக்குக் கூடக் கிட்டவில்லை. 65 பேருக்கு வாக்கு எண்ணிக்கை இருபதிலும் குறைவு.

அப்படியாயின் இவ்வளவு பேர் ஒன்றாக - அதுவும் கனடாவில் - ஓர் இடைத் தேர்தலில் களமிறங்கக் காரணம் என்ன?

கனடாவில் நடைமுறையில் இருக்கும் தேர்தல் முறைமை மிகப் பழமையானது. தேர்தல் சீர்திருத்தம் செய்யும்படி பல தரப்பினரும் வற்புறுத்தியும் அரசு அசைந்து கொடுக்கவில்லை. அதனால் தான் ஒரு குழுவினர் ஒன்று சேர்ந்து இத்துணை வேட்பாளர்களைக் களத்தில் இறக்கி, தேர்தல் சீர்திருத்தம் செய்யாவிட்டால் எத்துணை கஷ்டம் - நெருக்கடி - நேரும் என்பதை பட்டறிவாக உணர்த்த இந்த வேலையைச் செய்திருக்கின்றார்கள்.

வேட்பாளர் எண்ணிக்கையில் இந்தியத் தேர்தல்களுக்கு நிகராக வந்துள்ளது கனடாவின் இந்த இடைத்தேர்தல். ஆயினும், 84 ஆயிரம் வாக்காளர்களைக் கொண்ட தொகுதியில் வெறும் 34 ஆயிரம் பேரே வாக்களித்திருக்கின்றனர் என்பது செழுமையான ஜனநாயகம் அங்கு இல்லை என்பதைத்தான் காட்டுகின்றது என்பது என் கருத்து.

# இனங்களுக்கிடையே குரோதத்தை வளர்க்க திட்டமிட்டுச் செயற்படும் அரச அதிகாரிகள்!

## கஜேந்திரன் எம்.பி. பகிரங்கக் குற்றச்சாட்டு



(கனகராசா சரவணன்)

"அம்பாறை மாவட்ட அரச அதிபர் தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும்இடையேஇனக்குரோதத்தைவளர்த்து விடுகின்ற முகமாகத்தான் திட்டமிட்டு தொடர்ச்சியாக நடந்து கொண்டிருக்கின்றார். அவ்வாறே கல்முனை தெற்கு பிரதேச செயலாளரும் இரு இனங்களுக்குள் இனக்குரோதங்களை ஏற்படுத்தும் விதமாக சட்டத்துக்கு முரணாக அலுவலகங்களின் விவகாரத்தில் தலையிட்டு அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றார்." - என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு எதிராக இடம்பெறும் நிர்வாக அடக்குமுறையைக் கண்டித்து நேற்று முன்தினம் இடம்பெற்ற வீதி மறியல் போராட்டத்தில் பங்குபற்றிய கஜேந்திரன் எம்.பி., ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கல்முனை வடக்கு பிரதேச செயலகங்களின் அதிகாரங்களைப் பறித்து அதனுடைய செயற்பாடுகளை முடக்கி கல்முனையில் உள்ள தமிழர்களின் உரிமையை முற்றாகப் பறித்தெடுக்கும் நோக்கத்தோடும் இந்த நிலங்கள் அனைத்தையும் கபளீகரம் செய்யும் நோக்கத்தோடும் பல நீண்டகாலமாகத் திட்டமிட்ட செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இந்தப் பறிக்கப்பட்ட பிரதேச செயலகத்தின் அதிகாரங்கள் மீளவும் வழங்கப்பட வேண்டும் எனவும், ஒரு தனியான கணக்காளர் நியமிக்கப்பட வேண்டும் எனவும் தொடர்சியாக கல்முனை வடக்கு மக்கள் கோரி வந்துள்ளனர். இந்தக் கோரிக்கை புறக்கணிக்கப்பட்ட நிலையிலே கடந்த 92 நாட்களாக இந்தக் கோரிக்கைகளுக்காகத் தொடர்ச்சியாக அவர்கள் போராடி வருகின்றனர்.

ஆனால், 92 நாட்கள் ஆகியும் இனங்களுக்கிடையே ஒரு நல்லுறவைப் பேண வேண்டிய ஒரு அதிகாரியான இந்த அம்பாறை மாவட்டத்தின் அரச அதிபர் இந்த இடத்துக்கு இன்று வரையும் வரவில்லை. ஆனால், இந்தப் போராட்டம் ஆரம்பித்த பின்னர் அரச அதிபர் கல்முனை தெற்கு பிரதேச செயலகத்துக்குப் பல தடைவகள் வந்திருக்கின்றார். இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் பல தடவைகள் நான் பேசியுள்ளேன்.

அதேவேளை, கல்முனை தெற்கு பிரதேச செயலாளர் வேண்டுமென்றே இரு இனங்களுக்குள் இனக்குரோதங்களை ஏற்படுத்தும் விதமாக எதேச்சையாகச் சட்டத்துக்கு முரணாக இந்த அலுவலகங்களின் விவகாரத்தில் தலையிட்டு அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்.

மக்கள் தொடர்ந்து போராடுவதன் மூலம் மட்டும்தான் உரிமையை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். வேறு எந்த வழியிலும் உறுதிப்படுத்திக்கொள்ள முடியாது. மக்கள் முன்னெடுக்கும் இந்தப் போராட்டங்களுடன் நாங்கள் தொடர்ச்சியாகப் பக்கபலமாக நிற்போம்." - என்றார்.

## ரணில் - பஸில் சந்திப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ராஜபக்ஷவுக்கும் இடையில் ஒவ்வொரு வாரமும் இடம்பெற்று வரும் சந்திப்பில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

கடந்த வாரம் இடம்பெற்ற சந்திப்பில் ஜனாதிபதியின் சார்பில் மேலும் பல அரசியல்வாதிகள் கலந்துகொண்டமையே இந்தக் குழப்பத்துக்குக் காரணம்.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, மஹிந்த அமரவீர, துமிந்த திஸாநாயக்க மற்றும் வஜிர அபேவர்தன ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதைப் பஸில் விரும்பவில்லை. இந்தச் சந்திப்பில் பஸிலுக்கும் பிரசன்னவுக்கும் இடையில் வாய்த்தர்க்கமும் ஏற்பட்டது.

இதனால் அடுத்த சந்திப்பு இடம்பெறுமா என்பது சந்தேகமே. அப்படி இடம்பெற்றாலும், வழமைபோல் பஸிலும் ரணிலும் மாத்திரமே கலந்துகொள்ள வேண்டும் என்று பஸில் தரப்பு தெரிவித்துள்ளது.

## சட்டமா அதிபரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இந்தப் பின்னணியிலேயே அரசமைப்பு சபையின் முடிவைப் புறந்தள்ளி ஜனாதிபதி ரணில், சட்டமா அதிபரின் சேவைக் காலத்தை நீடித்திருக்கின்றார் என்று சொல்லப்படுகின்றது.

முன்னதாக அரசமைப்பு சபைக்கு 8 பக்கங்களைக் கொண்ட காட்டமான கடிதமொன்றை சில தினங்களுக்கு முன்னர் அனுப்பிய ஜனாதிபதி ரணில், அரசமைப்புச் சபையின் செயற்பாடுகளைக் கடுமையாக விமர்சித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கோர விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கம்பஹா, திவுலப்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திவுலப்பிட்டிய - நீர்கொழும்பு வீதியில் கடவல பகுதியில் இடம்பெற்ற விபத்திலேயே மேற்படி குழந்தை உயிரிழந்துள்ளது என்று திவுலப்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

திவுலப்பிட்டியிலிருந்து நீர்கொழும்பு நோக்கிப் பயணித்த ஓட்டோ ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி அருகிலிருந்த தொலைத் தொடர்பு கம்பத்தில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது ஓட்டோவின் சாரதியும் பின்புறத்தில் அமர்ந்திருந்த சாரதியின் குழந்தையும், மாமியாரும் பலத்த காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் நீர்கொழும்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் குழந்தை உயிரிழந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திவுலப்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# தன்னைத் தானே துப்பாக்கியினால் சுட்டுத் தற்கொலை செய்த மாணவன்

## கம்பளைப் பிரதேசத்தில் அதிர்ச்சிச் சம்பவம்

**(பொகவந்தலாவ நிருபர்: எஸ் சதீஸ்)**

உயர்தரப் பாடசாலை மாணவன் ஒருவன் தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் ஒன்று கம்பளை பிரதேசத்தில் பதிவாகியுள்ளது.

வேலைக்குச் செல்லும் தனது தாயாருடன் முரண்பட்ட மாணவன் பின் தாயாரை வணங்கி விட்டு அறைக்குச் சென்றுள்ளான். பின்னர், அறையின் கதவைப் பூட்டிவிட்டு, துப்பாக்கியால் சுட்டு உயிரிழந்துள்ளான் எனக் கம்பளை ஹெத்கால பொலிஸார் தெரிவித்தனர்.

கம்பளை வீதி உலப்பனையைச் சேர்ந்த கே.எம்.பி.ஆர்.ஜி.குலசேகர என்ற 18 வயது மாணவனே இவ்வாறு தற்கொலை செய்துக் கொண்டுள்ளான்.

மாணவன் கண்டியில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கணிதப்பிரிவில் பயின்று வந்துள்ளான்.

இவரது தாய் ஆசிரியை எனவும், தந்தை வனத்துறையில் பணியாற்றி ஓய்வு பெற்று, தற்போது தனியார் நிறுவன ஊழியர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒரே சகோதரன் பேராதனை பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகவும், ஒரே சகோதரி குருநாகல் போதனா வைத்தியசாலையில் பயிற்சி வைத்தியராகவும் கடமையாற்றுகின்றனர்.

தந்தை மறைத்து வைத்திந்த அவரது துப்பாக்கியைக் கண்டு பிடித்த மாணவன், துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்துக் கொண்டுள்ளான் என விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கம்பளை சர்வதேச பாடசாலையில் கல்வி பயின்ற இந்த மாணவன், க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் 08 ஏ சித்தி மற்றும் டீ சித்தியுடன் சித்தியடைந்து உயர்தரத்தில் கல்வி கற்பதற்காக கண்டியில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் இணைந்துள்ளார்.

ஒரு வருடத்திற்கு முன்னதாகவே உயர்தரத்துக்குத் தயாராகிய இவர், பரீட்சை எழுத முடியாமல் போய்விடுமோ என்ற அச்சத்தில் இருந்தார் எனக் கூறப்படுகிறது.

இந்த மாணவன் பெரும்பாலும் இணையவழியில் பாடங்களைச் கற்றுள்ளமையோடு, கணினி மற்றும் கைத்தொலைபேசியை அடிக்கடி பயன்படுத்தியுள்ளான் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக் காலை தாய் வேலைக்கு செல்ல தாமதமாகியிருந்த நிலையில் தாய்க்கும் மகனுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மாணவன் தனது அறைக்குச் சென்று கதவை மூடிக்கொண்டு திறக்காமல் இருந்துள்ளான். சிறிது நேரத்தில் துப்பாக்கி வெடிக்கும் சத்தம் ஒன்று கேட்டுள்ளது.

பதறிய தாய் உடனடியாக தந்தைக்கு தெரிவிக்கவே கதவை உடைத்து திறந்து பார்த்தவர்களுக்கு காத்திருந்ததோ பேரதிர்ச்சி.

மாணவன் தன்னைதானே துப்பாக்கியால் சுட்டுக்கொண்டு இறந்து கிடந்தான். மேலும் அவனது மடியில் ஒரு கத்தியும் இருந்துள்ளது.

அந்தத் துப்பாக்கி தொடர்பில் விசாரணை நடத்திய பொலிஸார், அது மாணவனின் தந்தைக்குச் சொந்தமான எனக் கண்டறிந்துள்ளனர்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நீடிக்கும் சர்வாதிகாரம்

தமது தற்போதைய பதவிக்காலத்தின் அந்தத்தை எட்டி இருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஓர் அரசமைப்புக் குழப்பத்திற்கு வித்தூன்றியிருக்கின்றார்.

அரசமைப்புக் கவுன்ஸிலின் அனுமதி - அங்கீகாரம் - இன்றி தற்போதைய சட்டமா அதிபர்சஞ்சய் ராஜரத்தினத்தின் பதவிக் காலத்தை ஆறு மாதங்களுக்கு நீடித்து அவர் பதவி நியமனக் கடிதம் வழங்கியிருக்கின்றார் என்று செய்திகள் வெளியாகி உள்ளன.

தற்போதைய சட்டமா அதிபரின் பதவிக் காலம் அவர் நாளை மறுதினம் 60 வயதை எட்டுவதை ஒட்டி நாளையுடன் முடிவடைகின்றது.

அவருக்கு மேலும் ஆறு மாத காலம் பதவி நீடிப்பு வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு பரிந்துரைத்திருந்தார். ஆனால் அந்தப் பரிந்துரையைப் பரிசீலித்த அரசமைப்புக் கவுன்ஸில் 5 -3 எனப் பிரிந்து அந்தப் பரிந்துரையை நிராகரித்துவிட்டது.

எனினும் அந்த சிபாரிசை மீள்பரிசீலனை செய்யுமாறு அரசமைப்புக்கவுன்ஸில்கோரப்பட்டதால் அதற்காக அரசமைப்பு கவுன்ஸில் இன்று மீண்டும் கூடுகிறது.

ஆனால், அதற்கிடையில், அரசமைப்புக் கவுன்ஸிலின் முடிவுக்கு மாறாக - தம்பாட்டில் -சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினத்துக்கு ஆறு மாத கால பதவி நீடிப்பை ஜனாதிபதி வழங்கி இருக்கின்றார்.

சட்டமா அதிபர் போன்ற உயர் பதவி நியமனங்களில் அரசமைப்புக் கவுன்ஸிலின் இணக்கமின்றி எதுவும் செய்யக்கூடாது என்பதுதான் அரசமைப்பு ஏற்பாடு.

ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவோ தாம் ஜனாதிபதி என்ற முறையில் பரிந்துரைக்கும் சகலவற்றுக்கும் அரசமைப்புக் கவுன்ஸிக் இணக்கம் தெரிவிக்க வேண்டும், மறுக்கக்கூடாது என்று கட்டாயப்படுத்துகின்றார். அதனை நடைமுறைப் படுத்துவதற்காக அரசமைப்புக் கவுன்ஸிலையும் அரசமைப்பையுமே தம் இஷ்டப்படி அவர் மீறுகிறார்.

பொலிஸ் மா அதிபர் நியமனத்திலும் இது நடந்தது. அரசமைப்புக் கவுன்ஸிலின் தீர்மானத்தை சபாநாயகர் குளறுபடி பண்ணி மாற்றி அறிவிக்க, அதைப் பயன்படுத்தி அரசமைப்புக் கவுன்ஸிலின் முடிவுக்கு மாறாக பொலிஸ்மா அதிபரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்தார்.

பொலிஸ்மா அதிபர் நியமனத்தில் நடந்த இந்த முறைகேடு குறித்து உயர் நீதிமன்றத்தில் முறையிடப்பட்டும் பலன் இல்லை. 'தாமதித்த நீதி மறுக்கப்பட்ட நீதியாகிவிடும்' என்ற நீதித்துறையின் அடிப்படைக் கோட்பாட்டையே புரியாத இலங்கையின் நீதித்துறை - உயர் நீதிமன்றம் - இந்த விடயத்தை அதன் மிக மந்த வேகத்தில் விசாரித்துத் தீர்வு காணும் போது, தற்போதைய பொலிஸ்மா அதிபர் ஓய்வில் சென்றிருப்பார்.

அதற்குள், அப்படி நீதியை வழங்க போகும்சபைக்கு 'உயர்'நீதிமன்றம்என்று வேறு நாமம் கூட வைத்திருக்கின்றார்கள் என்பது நகைச்சுவைக்குரியது.

இலங்கையின் சரித்திரத்தில் எந்த சட்டமா அதிபரும் 60 வயதின் பின் ஒரு நாள் கூட பதவியில் இருந்தவர்கள் அல்லர்.

இப்போது இருப்பவர் நாளையுடன் 60 வயதை தாண்டுகிறார். அரசமைப்பு ஏற்பாடுகளையும், அதன் கீழ் இத்தகைய நியமனங்களை உறுதிப்படுத்தும் அதிகாரம் கொண்ட அரசமைப்புக் கவுன்ஸிலையும் மீறி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த சட்டமா அதிபருக்கு பதவி நீடிப்பு வழங்குகின்றார்.

இந்தப் பதவி நீடிப்பு சட்டவிரோதமானது எனத் தெரிவித்து, சட்டத்தின் ஆட்சிக்காகப் போராடும்பல அமைப்புக்கள் நிச்சயமாக உயர் நீதிமன்றத்திற்கு அடிப்படை உரிமை மீறல் மனுக்களுடன் நாளையே படையெடுக்கும் என்பது உறுதி.

ஆயினும், உரியகாலத்தில்நீதிபெற்றுக் கொடுக்கும் - நிலை நாட்டும் - சிந்தனையே இல்லாத நமது நீதித்துறை எப்படி நடந்து கொள்ளும் என்பதும் தெரிந்ததுதான். ஆறு மாத கால பதவி நீடிப்பு வழங்கல் சட்ட முறையற்றது என்ற அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு ஏற்பதா என்பதை அந்த ஆறு மாத காலத்துக்குள் நமது உயர் நீதிமன்றம் தீர்மானித்தால் அதுவே சாதனையாகத்தான் இருக்கக் கூடும்.

இத்தகைய வழுவழுத்த நீதித்துறை இருக்கும் வரை நிறைவேற்று அதிகாரத்தின் சர்வாதிகாரம் கொடி கட்டிப் பறப்பது தவிர்க்க முடியாத கட்டாயம்தான்.

# மக்களவை எதிர்க்கட்சித் தலைவராக ராகுல் காந்தி தெரிவுசெய்யப்பட்டார்



மக்களவை எதிர்க்கட்சி தலைவராக காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி தேர்வு செய்யப்பட்டுள்ளார் என அக்கட்சி தலைமை அறிவித்துள்ளது.

டில்லியில் உள்ள காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே வீட்டில் இண்டியா கூட்டணியின் ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இந்த ஆலோசனையின் முடிவில் ராகுல் காந்தி மக்களவை எதிர்கட்சித் தலைவராக ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார்.

பின்னர் நடந்த செய்தியாளர் சந்திப்பில் காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே.சி.வேணுகோபால் இதனை தெரிவித்தார்.

இதுதொடர்பாக தற்காலிக மக்களவை சபாநாயகருக்கு கடிதம் எழுதியுள்ளாகவும், ஏனைய நியமனங்கள் குறித்து பின்னர் முடிவெடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகிக்கும் நேரு குடும்பத்தைச் மூன்றாவது நபர் ராகுல் காந்தி ஆவார். அவருக்கு முன், சோனியா காந்தி மற்றும் ராஜீவ் காந்தி ஆகியோர் இந்த பதவியை வகித்தனர்.

இன்னொருபுறம், 18 ஆவது மக்களவைக்கான சபாநாயகரை தேர்வு செய்வதற்கான தேர்தல் இன்று நடைபெறும் என மத்திய அரசு அறிவித்துள்ளது.

கடந்த முறை தனிப்பெரும்பான்மையுடன் பா.ஜ.க. ஆட்சியமைத்தால் தனிப்பட்ட முறையில் பா.ஜ.க. சபாநாயகரை தேர்வு செய்தது.

ஆனால், இம்முறை பெரும்பான்மை இல்லாத பட்சத்தில் கூட்டணி ஆதரவுடன் ஆட்சியமைத்துள்ளதால் தேசிய ஜனநாயக கூட்டணியில் உள்ள கட்சிகளுக்கு சபாநாயகர் பதவி கொடுக்கப்படலாம் என்ற பேச்சுகளும் உள்ளன.

முன்னதாக, நேற்று மக்களவையில் காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி, ரேபரேலி மக்களவை தொகுதியின் உறுப்பினராக பதவியேற்றார்.

அரசியல் சாசன பிரதியை கையில் ஏந்தியவாறு ஆங்கிலத்தில் உறுதிமொழி கூறி பதவியேற்ற ராகுல் காந்தி, இறுதியில் இந்தியா வாழ்க! அரசியலமைப்பு வாழ்க! என முழக்கமிட்டார். அவர் பதவியேற்கும்போது, காங்கிரஸ் உறுப்பினர்களும் கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் கோஷங்களை எழுப்பி தங்கள் ஆதரவை வெளிப்படுத்தினர்.

# பிரதமர் நரேந்திர மோடி ரஷ்யாவுக்கு பயணமாகிறார்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் ரஷ்யப் பயணம் ஜூலை மாதம் நடைபெறலாம் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த பயணத்தின் போது பிரதமர் மோடி மற்றும் ஜனாதிபதி புடின் இடையே சந்திப்பு நடைபெற உள்ளதாகவும், அதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் ரஷ்ய அரசாங்கம் தயார் செய்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை, இந்த ஆண்டு மே மாதம் ரஷ்ய ஜானாதிபதி புடின் தொடர்ந்து ஐந்தாவது முறையாக பதவியேற்றார். அதே நேரத்தில் நரேந்திர மோடி தொடர்ந்து மூன்றாவது முறையாக இந்தியாவின் பிரதமராக பதவியேற்றிருந்தார்

மேலும் 2000 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஜனாதிபதி விளாடிமிர் புடினின் இந்திய விஜயத்தின் போது வருடாந்திர இந்தியா-ரஷ்யா உச்சிமாநாட்டை நடத்த இருநாடுகளும்



இணக்கத்தை ஏற்படுத்திக்கொண்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

# கேஜ்ரிவாலுக்கு வழங்கப்பட்ட பிணைக்கு உயர் நீதிமன்றம் தடை



டில்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவாலுக்கு விசாரணை நீதிமன்றம் வழங்கிய பிணையை தடை செய்து டில்லி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

டில்லி மதுபான கொள்கை முறைகேடு தொடர்பான பணமோசடி வழக்கில் அமலாக்கத் துறையால் டில்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த வழக்கில் பிணை கோரி அவர் தாக்கல் செய்த மனுவை விசாரித்த விசாரணை நீதிமன்றம் கடந்த 20 ஆம் திகதி அவருக்கு பிணை வழங்கி உத்தரவிட்டது.

இதையடுத்து, திகார் சிறையில் இருந்து கேஜ்ரிவால் வெளியே வருவார் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும், விசாரணை நீதிமன்ற உத்தரவுக்கு தடை கோரி அமலாக்கத் துறை மறுநாளே டில்லி உயர் நீதிமன்றத்தில் அவசரமனு தாக்கல் செய்தது.

மனுவை விசாரித்த டில்லி உயர் நீதிமன்ற நீதிபதி சுதிர் குமார் ஜெயின், விசாரணை நீதிமன்ற உத்தரவை தற்காலிகமாக நிறுத்திவைத்து உத்தரவிட்டார். இதனால், கேஜ்ரிவால் சிறையில் இருந்து வெளியே வருவது தடைபட்டது.

பிணை உத்தரவை எதிர்த்து அமலாக்கத் துறை தொடர்ந்த மனு மீது விசாரணை நடத்தப்படும் என டில்லி உயர் நீதிமன்றம் தெரிவித்திருந்தது. அதன் அடிப்படையில் நடத்தப்பட்ட விசாரணையின் முடிவில் நேற்று தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

அதில், டில்லி முதல்வர் கேஜ்ரிவாலுக்கு பிணை வழங்கிய விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு தடை விதிக்க வேண்டும் என்ற அமலாக்கத் துறையின் கோரிக்கையை ஏற்பதாக நீதிபதி தெரிவித்தார்.

இந்த நிலையில், பிணை உத்தரவை நிறுத்தி வைத்த டில்லி உயர் நீதிமன்றத்தின் உத்தரவை எதிர்த்து அரவிந்த் கேஜ்ரிவால் தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு இன்று விசாரணைக்கு வர உள்ளது.



# வரி அதிகரிப்புக்கு எதிராக கென்யாவில் வலுப்பெற்றுள்ள மக்கள் போராட்டம்

கென்ய தலைநகர் நைரோபியில் வரி அதிகரிப்பு முன்மொழியப்பட்டுள்ள நிலையில், அங்கு மக்கள் போராட்டம் வலுவடைந்துள்ளது.

ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நிலையில், அவர்களை கலைக்க பொலிஸார் கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

கென்ய நாடாளுமன்றத்தில் வரி அதிகரிப்பு தொடர்பான விவாதம் நடைபெற்ற நிலையில், நாடாளுமன்றம், குடியரசுத் தலைவர் அலுவலகம் உள்ளிட்ட முக்கிய இடங்கள் மூடப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்திற்கு எதிரான இந்த போராட்டத்தில் இணையுமாறு பொதுமக்களுக்கு ஏற்பாட்டாளர்களால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், ஜனாதிபதி வில்லியம் ரூட்டோ பதவி விலக வேண்டும் என போராட்டக்காரர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

எவ்வாறாயினும், ஆர்ப்பாட்டக்காரர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடத் தயார் என ஜனாதிபதி வில்லியம் ரூட்டோ அறிவித்திருந்த நிலையில், ஜனாதிபதி தீர்வுகளை பொதுவெளியில் அறிவிக்க வேண்டுமென ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தியுள்ளனர்.



# இஸ்ரேலின் தாக்குதல்களுக்கு அமெரிக்காவே பொறுப்புக் கூற வேண்டும்: ஹமாஸ் தெரிவிப்பு

இஸ்ரேல் மேற்கொள்ளும் தொடர்ச்சியான தாக்குதல்களுக்கு, அமெரிக்காவே பொறுப்புக் கூற வேண்டும் என்று ஹமாஸ் தெரிவித்துள்ளது.

பாலஸ்தீனத்தின் வடக்கு எல்லையில் உள்ள காசாவின் ஷாட்டி அகதிகள் முகாம் மீது, இஸ்ரேல் வான் தாக்குதலை நடத்தியுள்ளது.

இதில் ஹமாஸ் போராளிகளின் பிரதானி இஸ்மாயில் ஹானியேயின் குடும்ப உறுப்பினர்கள் 10 பேர் பலியாகினர்.

இது தொடர்பாக அல் ஜெசீராவுக்கு கருத்து தெரிவித்துள்ள ஹமாஸ் இயக்கம், இஸ்ரேலுக்கு அமெரிக்கா தொடர்ச்சியாக இராணுவ மற்றும் நிதி வளங்களை வழங்கி, யுத்தம் தொடர்வதை ஊக்குவிப்பதாகக் குற்றம் சுமத்தியுள்ளது.




# தகவல் தொழில்நுட்பம் ஊடாக பொருளாதாரத்தையும் தொழில்நுட்பப் பிரிவுகளையும் ஒருங்கிணைப்போம்!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

"கணினி மற்றும் தகவல் தொழில்நுட்பத்தின் ஊடாக பொருளாதார – தொழிநுட்பத் துறைகளை ஒருங்கிணைப்பது குறித்து அரசாங்கத்தின் விசேட கவனம் செலுத்து வருகின்றோம்."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

2024ஆம் ஆண்டுக்கான 'DigiEcon' உலக முதலீட்டு மாநாடு 'இலங்கையின் இதுவரை பயன்படுத்தப்படாத திறனைப் பயன்படுத்துதல்' எனும் தொனிப்பொருளில் ஜனாதிபதி தலைமையில் கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் நேற்று ஆரம்பமானது.

ஆரம்ப அமர்வின் பின்னர், தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத், முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க ஆகியோரின் பங்கேற்புடன் கலந்துரையாடல் இடம்பெற்றது.

மேலும், இந்த மாநாட்டுடன் இணைந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஐகுளு இன் பிரதம நிறைவேற்று அதிகாரி மார்க் மொபட் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்றும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில் –

"நாம் விரைவான வளர்ச்சியில் கவனம் செலுத்த வேண்டுமானால், டிஜிட்டல் பொருளாதாரம் மற்றும் முழுத்தாக்க கட்டமைப்பு அவசியம். அதை சுற்றுலா மற்றும் விவசாய நவீனமயமாக்கல் மூலம் ஆரம்பிக்க முடியும். இத்துறை மற்றொரு வேகமாக வளர்ந்து வரும் துறையாக அடையாளம் காணப்பட்டுள்ளது. அதனை எவ்வாறு மேம்படுத்துவது, எங்கிருந்து அதற்கான பயணத்தை ஆரம்பிப்பது என்ற கேள்விகள் உள்ளன.

அதற்காக முதலில், நமது பொருளாதாரத்தில் இந்தத் துறையை எவ்வாறு விரிவுபடுத்துவது என்பதைக் கண்டறிய வேண்டும். டிஜிட்டல் பொருளாதாரம் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் புத்தாக்கம் என்பன நமக்கு எவ்வாறு பயனளிக்கும் என்று ஆராய வேண்டும்.

நாம் தற்போது அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய துறைகளை அடையாளம் கண்டுள்ளோம். விவசாய நவீனமயமாக்கல் டிஜிட்டல் துறையின் விரிவாக்கத்துடன் கைகோர்த்து செல்லும். இரண்டாவதாக, பொருளாதார நெருக்கடி மற்றும் தொழில்நுட்பத்தின் பயன்பாடு. அந்த தொழில்நுட்பத்தை உருவாக்கி பயன்படுத்தக்கூடிய பணியாளர்கள் தேவை குறித்தும் கவனம் செலுத்த வேண்டும்.

டிஜிட்டல் பொருளாதார கேள்வி அதிகரித்துள்ளது. ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவின் எதிர்கால தேவைகளைப் பார்க்க வேண்டியது அவசியம். வன்பொருள் மற்றும் மென்பொருள் துறைகளை உள்ளடக்கிய சீனா மற்றும் இந்தியா ஆகிய இரண்டு ஜாம்பவான்களுக்கு இடையே நாம் இருக்கிறோம். அந்த அறிவைப் பயன்படுத்தி மேற்படி நாடுகளுடன்

தொடர்ச்சி▼















# தகவல் தொழில்நுட்பம் ஊடாக பொருளாதாரத்தையும் தொழில்நுட்பப் பிரிவுகளையும் ஒருங்கிணைப்போம்!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

தொடர்ச்சி▲

ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும்.

தனியார் துறையில் கிடைக்கும் வாய்ப்புகள் குறித்து ஏற்கனவே இந்தியாவுடன் கலந்துரையாடலை தொடங்கியுள்ளோம். இலங்கை மென்பொருள் மற்றும் சேவை நிறுவனங்களின் சங்கம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் வணிக செயல்முறை முகாமைத்துவ நிறுவனங்களின் அரச சார்பற்ற இந்திய வர்த்தக சங்கம் ஆகியவை இதற்கு ஒத்துழைக்க முன்வந்துள்ளன. மேலும் பல நிறுவனங்களும் இணைந்துகொள்ளும் என நம்புகிறோம்.

இந்த வர்த்தகத்தை உருவாக்கும் அதேநேரம் நமக்கான தேசிய களத்தை உருவாக்குவதற்கான ஒத்துழைப்பை பெறவும் நாம் முயற்சிக்கிறோம். சீனாவுடனான ஆரம்பகட்ட பேச்சுவார்த்தைகள் தொடங்கியுள்ளோம். அதன் முடிவுகள் வெற்றிகரமாக அமையுமென நம்புகிறோம். நாம் ஆசியாவிலிருந்தே பயணத்தை ஆரம்பிக்க வேண்டும்.

அதன்போது பலதரப்பட்ட துறைகள் குறித்து கனவம் செலுத்த வேண்டியதும் அவசியமாகும்.

டிஜிட்டல் பரிமாற்ற முகவர் நிலையமொன்றை அமைக்க இருக்கிறோம். முன்பு, கணினி மற்றும் தகவல் தொழில்நுட்பத்தில் கவனம் செலுத்திய நாங்கள், இப்போது பொருளாதார மற்றும் தொழில்நுட்ப அம்சங்களை ஒருங்கிணைப்பதில் கவனம் செலுத்துகிறோம். நாங்கள் அறிமுகப்படுத்தும் இறுதி புதிய நிறுவனம் செயற்கை நுண்ணறிவுக்கான தேசிய மையமாகும்.

நமது பல்கலைக்கழகங்களில் இருக்கும் வசதிகளை மேம்படுத்தி விரிவுபடுத்தி வருகிறோம். பல்கலைக்கழகங்களில் செயற்கை நுண்ணறிவு (AI) கற்பித்தலை அறிமுகப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் உயர் தொழில்நுட்ப நகரங்களுக்கும் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த வேண்டும். இதற்காக குறைந்தபட்சம் 100 ஏக்கர் அல்லது அதற்கும் அதிகமான பரப்பளவு கொண்ட கொழும்பின் புறநகர் பகுதியில் காணியொன்றை பெறுவது குறித்து கவனம் செலுத்தியுள்ளோம். யாழ்ப்பாணம் போன்ற சிறிய பகுதிகளில் 25 முதல் 50 ஏக்கர் வரையிலான நகரங்களை நிறுவ முடியும். ஒரு பாரிய அதிதொழில்நுட்ப நகரம் கொழும்பிலும் மற்றொன்று கண்டியிலும் நிறுவ எதிர்பார்க்கிறோம்" – என்றார்.







# சுற்றுலாப் பயணிகளுக்கென பலாலியில் தகவல் தொடர்பு நிலையம் திறந்துவைப்பு

யாழ்ப்பாணம், பலாலி சர்வதேச விமான நிலையத்தில் பயணிகள் வெளியேறும் பகுதியில் சுற்றுலாப் பயணிகளுக்கான தகவல் தொடர்பு நிலையம் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் சுற்றுலாப் பயணிகள் இலகுவாக பயணிக்க கூடிய வரலாற்று சிறப்புமிக்க இடங்கள், வழிபாட்டு தளங்கள் உள்ளிட்ட விடயங்கள் அடங்கிய சுற்றுலா வழிகாட்டி கையேடுகளை தகவல் தொடர்பு நிலையத்தில் இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் வடக்கு மாகாணத்தில் உற்பத்தி செய்யப்படும் கைவினைப் பொருள்களும் இங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

சுற்றுலாப் பயணிகளுக்கான தகவல் தொடர்பு நிலையத்தை திறந்து வைத்ததன் பின்னர், விமான நிலைய செயற்பாடுகளை ஆளுநர் பார்வையிட்டமையுடன், விமான பயணிகளுடனும் கலந்துரையாடினார்.

சுற்றுலாப் பயணிகளுக்கான தகவல் தொடர்பு நிலையத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், சுற்றுலாப் பணியகத்தின் தலைவர், விமான நிலைய அதிகாரிகள் எனப் பலரும் கலந்துச் சிறப்பித்தனர்.



















# நம்முடைய பாரம்பரியங்களை நாமே பாதுகாத்தல் வேண்டும்

## அம்மாச்சி உணவக திறப்பு விழாவில் ஆளுநர் தெரிவிப்பு

எமது பாரம்பரியங்களை நாமே பாதுகாக்க வேண்டும் என அம்மாச்சி உணவக திறப்பு விழாவில் வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் சங்கானை பஸ் தரிப்பிட சதுக்கத்தில் புதிதாக அமைக்கப்பட்ட அம்மாச்சி பாரம்பரிய உணவகத்தை வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் நேற்றுத் திறந்து வைத்தார்.

அவர் உணவகத்தின் விற்பனை செயற்பாடுகளையும் ஆரம்பித்து வைத்தமையுடன், வலிகாமம் மேற்கு பகுதி பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகளையும் வழங்கி வைத்தார்.

உள்ளூர் கலைஞர்கள் மற்றும் விவசாயிகள் இதன்போது கௌரவிக்கப்பட்டனர். வறிய குடும்பங்களை சேர்ந்த மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன .

இந்நிகழ்வில் உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர் –

“மக்களின் அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் மக்களோடு இணைந்து பிரதேச சபைகள் செய்யற்பட வேண்டும்.



அதற்கமைய பல சிறப்பான வேலைத்திட்டங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள் ஊடாகவும், மாகாண சபையினூடாகவும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மாகாணத்தில் வசிக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதே எமது நோக்கமாகும். ஒவ்வொரு பிராந்தியத்துக்கும் வெவ்வேறு தனித்துவங்கள் காணப்படுகின்றன.

எமது மண்ணின் தனித்துவங்களையும் பாரம்பரியங்களையும் நாமே பாதுகாக்க வேண்டும். யாழ்ப்பாண உணவுகளுக்கு வெளி பிரதேச மக்களிடமும், வெளிநாட்டு மக்களிடமும் அதிக வரவேற்பு காணப்படுகின்றது.

அவற்றைத் தொடர்ந்தும் பேணிப் பாதுகாக்க வேண்டும். அம்மாச்சி பாரம்பரிய உணவகங்கள் ஊடாக தொடர்ச்சியாக மக்களுக்கான தரமான, சுவையான உணவுகள் வழங்கப்பட வேண்டும்.” – எனத் தெரிவித்தார்.











# தம் நாடாளுமன்ற சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாக விஜேதாஸ ராஜபக்ஷ சபாநாயகரிடம் முறைப்பாடு



நாட்டின் மாவட்ட நீதிபதிகள் மற்றும் நீதிவான்களின் தொழில்சார் அமைப்பான நீதிச் சேவைகள் சங்கம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையூடாக தமது நாடாளுமன்ற சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளன என நீதி அமைச்சர் கலாநிதி விஜேதாஸ ராஜபக்ஷ சபாநாயகரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் அதிகாரம் மற்றும் சிறப்புரிமைகள் குழு முன்னிலையில், அந்த சங்கத்தின் தலைவர் மற்றும் செயலாளரை அழைத்து விசாரணை நடத்தி உரிய தீர்ப்பை வழங்குமாறு நீதி அமைச்சர் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நீதிபதிகள் சிலர் மற்றும் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் தொடர்பில் நீதி அமைச்சர் கடந்த 19 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் கருத்து வெளியிட்டிருந்தார்.

கடந்த 19 ஆம் திகதி நீதி அமைச்சர் நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு நீதிச் சேவைகள் சங்கம் நேற்று முன்தினம் ஊடக அறிக்கையொன்றை விடுத்துள்ளது.

சங்கத்தின் தலைவர், கேகாலை மாவட்ட நீதவான் ருவன் திசாநாயக்க மற்றும் செயலாளர் காலி நீதவான் இசுறு நெத்திகுமார ஆகியோரின் கையொப்பத்துடன் அறிக்கை வெளியிடப்பட்டது.

நீதிமன்றக் கட்டமைப்பை விமர்சிக்கும் வகையிலான பொறுப்பற்ற கருத்துகள் தொடர்பில் தமது சங்கத்தின் கவனம் திரும்பியுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீதித்துறைக்கு ஏற்படும் வெளித்தரப்பு அழுத்தங்களை தவிர்த்து, அதன் நலனுக்காக முக்கிய முடிவுகளை எடுத்த நீதிபதிகள் இடமாற்றம் செய்யப்பட்ட பின்னர், அவர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் அபகீர்த்தி ஏற்படும் வகையில் நிலைப்பாட்டை உருவாக்குவது இதன் ஒரு நடவடிக்கையாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதித்துறை மீதான வெளிப்புற அழுத்தங்களிலிருந்து பாதுகாப்பதற்கான பலமிக்க மற்றும் கடினமான பணியை ஆற்றி வரும் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரை பாதுகாப்பதற்காக தாம் நிபந்தனையின்றி முன்னிற்பதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை தொடர்பாக சிறப்புரிமை கேள்வி எழுப்பி, நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ, பிரதம நீதியரசர் மற்றும் நீதிச்சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளருக்கு பிரதியிட்டு நேற்று சபாநாயகருக்கு எழுத்துமூல முறைப்பாடு ஒன்றை அனுப்பியுள்ளார்.

# நீதித்துறை விவகாரங்களில் தலையீடு செய்வதை நாடாளுமன்ற உறுப்பினர்கள் தவிர்க்க வேண்டும்

## சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தல்

நாடாளுமன்ற சிறப்புரிமைகள் என்ற போர்வையில், நீதித்துறை மற்றும் நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் விவகாரங்களில் தலையிடுவதை நாடாளுமன்ற உறுப்பினர்கள் தவிர்க்க வேண்டும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

அவ்வாறான செயற்பாடுகளால் நீதித்துறை மீதான பொதுமக்களின் நம்பிக்கை மீறப்படுவது போன்ற மோசமான விளைவுகள் ஏற்படும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதித்துறையின் சுதந்திரத்தையும் சட்டவாட்சியையும் பாதுகாப்பதற்குத் தாம் அர்ப்பணிப்புடன் இருக்கின்றனர் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

சுதந்திரமான மற்றும் தைரியமான நீதித்துறையை ஆதரிப்பதாகவும், சட்டவாட்சியை பாதுகாப்பது அவசியம் எனவும் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நீதித்துறை அதிகாரி ஒருவருக்கு எதிராக ஏதேனும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுமாயின், முதலில் அதனை பாரபட்சமின்றி விசாரணை செய்ய வேண்டும் எனவும் அதில் கூறப்பட்டுள்ளது.

அவ்வாறான விசாரணையின் பின்னர், நீதித்துறை அதிகாரி குற்றமிழைத்துள்ளார் என்பது உறுதி செய்யப்படும் பட்சத்தில், உரிய நடவடிக்கை எடுக்க முடியும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.



# ‘உறுமய’ திட்டத்தை சீர்குலைக்க முயற்சிக்கும் அதிகாரிகள் பற்றித் தகவல்களை வழங்குங்கள்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை

“உறுமய நிரந்தர காணி உறுதித் திட்டத்திற்காக அரச அதிகாரிகள் பலர் அர்ப்பணிப்புடன் செயற்படும் அதே வேளை, சிலர் அதனைச் சீர்குலைக்க முயல்கின்றனர் எனத் தகவல்கள் கிடைத்துள்ளன. அவ்வாறான அதிகாரிகள் குறித்த தகவல்களை பிரதேசத்திலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்குங்கள் “

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

20 லட்சம் ‘உறுமய’ காணி உறுதி வழங்கும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தின் 17 பிரதேச செயலகப் பிரிவுகளில் தகுதியான 20 ஆயிரம் பேரில் 1,768 பேருக்குக் காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வு நேற்று அம்பாறை வீரசிங்க விளையாட்டரங்கில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றுகையில் ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“இன்று உங்கள் அனைவருக்கும் முழுமையான காணி உறுதி கிடைக்கும். இதைப் பாதுகாத்து உங்கள் பிள்ளைகளுக்குக் கொடுப்பது உங்கள் பொறுப்பு. இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது, ஏன் இந்த காணி உரிமையை வழங்குகிறீர்கள் எனச் சிலர் கேள்வி எழுப்பினர். வெள்ளையர்கள் நிலத்தை கையகப்படுத்திய அதே சட்டத்தைப் பயன்படுத்தி இந்த காணி உரிமைகளை மக்களுக்கு வழங்குகிறோம். இது உங்கள் உரித்தாகும். நாடளாவிய ரீதியில் 20 லட்சம் காணி உறுதிகளை வழங்க திட்டமிட்டுள்ளோம். அந்த நடவடிக்கைகளுக்காக நிலஅளவைத் திணைக்களம் உள்ளிட்ட நிறுவனங்களின் பணியாளர்களை அதிகரிக்க தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் வெற்றிபெற அரசு அதிகாரிகள் கடுமையாக உழைத்து வருகின்றனர். இதற்கு பலரும் ஆதரவு தெரிவித்து வருகின்றனர். ஆனால், மக்களைப் பயமுறுத்தும் அதிகாரிகள் குழு பற்றிய தகவல்களும் கிடைத்துள்ளன. இந்தக் காணிகளை மீள அரசாங்கம் சுவீகரிக்க முடியும். அதனால் ஏன் இந்த காணி உறுதிப் பத்திரங்களை எடுக்கின்றீர்கள் எனக் கேள்வி எழுப்பி வருகின்றனர் எனத் தெரியவந்துள்ளது. ஆனால், உங்களிடம் மீண்டும் ஒரு முறை அதிகாரி யாராவது கேள்வி கேட்டால், அந்த அதிகாரிகள் குறித்த தகவல்களை உங்கள் பிரதேச எம்.பி.க்கு அறிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அதிகாரிகளை விசாரித்து உண்மைகளை என்னிடம் தெரிவிக்குமாறு எம்.பி.க்களிடம் கோருகிறேன்.

இதுபோன்று செயற்பட்டு இடையூறு விளைவிக்கும் வகையில் நடந்து கொள்ளும் சில அதிகாரிகளினால் தமது பணியை சிறப்பாக செய்யும் அதிகாரிகளுக்கும் அவப் பெயர் ஏற்படுகிறது.

தொடர்ச்சி▼















# ‘உறுமய’ திட்டத்தை சீர்குலைக்க முயற்சிக்கும் அதிகாரிகள் பற்றித் தகவல்களை வழங்குங்கள்

தொடர்ச்சி▲

அதை அனுமதிக்க முடியாது.

அத்துடன், மாவட்ட செயலகங்களுக்கும் பிரதேச செயலகங்களுக்கும் சென்று இந்தக் காணிகளைப் பெறுவதற்குத் தகுதியுடையவர்கள் பற்றிய தகவல்களைக் கண்டறிந்து எமக்கு வழங்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். இது குறித்து ஆளுநர்களைத் தெளிவுபடுத்தியுள்ளேன். நீங்கள் அனைவரும் சேர்ந்து இந்தத் திட்டத்தை திறம்படச் செய்ய முடியும். எனவே, அனைவரும் இத்திட்டத்தில் முழுமையாக ஈடுபடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.



இந்தக் காணி உரிமைகளை வழங்குவது மட்டும் போதுமானதல்ல. காணி உரிமைகளைப் பெறும் விவசாயிகளின் வருமான வழிகளும் அதிகரிக்கப்பட வேண்டும். அதன் ஊடாக நாட்டின் விவசாய உற்பத்தியை அதிகரிக்க முடியும். அதற்காக விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தை தொடங்கியுள்ளோம். அந்தத் திட்டத்தின் மூலம் அனைத்துப் பயிர்களுக்கும் தேவையான தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்பட்டு வருகிறன. அதன் மூலம் அடுத்த 05 ஆண்டுகளில் விவசாயிகள் தங்கள் உற்பத்தியை அதிகரிக்கத் தேவையான ஆதரவைப் பெறுவார்கள்.

எனவே கட்சி பேதமின்றி எதிர்வரும் 02 மாதங்களில் இந்த காணி உறுதிப் பத்திரங்கள் அனைத்தையும் மக்களுக் கான வழங்க இங்குள்ள அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் முன் னின்று செயற்பட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்”– என்றார்.

# அதிபர், ஆசிரியர்கள் இன்றையதினம் சுகவீன விடுமுறைப் போராட்டத்தில்!

## ஆதரவு தந்து ஒத்துழைக்கக் கோரிக்கை

இன்றைய தமது சுகவீன விடுமுறைப் போராட்டத்திற்கு ஒத்துழைக்குமாறு அதிபர்கள், ஆசிரியர்களுக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.


இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகச் செயலாளர் சி.சசிதரன் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில் –

சம்பள உயர்ச்சிக்காக ஒருநாள் விடுமுறையை அறிவிப்போம். அதிபர்கள், ஆசிரியர்களின் வேதன முரண்பாடுகளைத் தீர்ப்பதற்காக 1998 ஆம் ஆண்டுமுதல் மாறி மாறி வருகின்ற ஆட்சியாளர்களிடம் சம்பள முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளைக் கையளித்தோம். ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் தீர்ப்பதாக வாக்குறுதியளித்து பின்னர் ஏமாற்றப்பட்டோம்.

இது காலம் காலமாகத் தொடர்கின்றது. இன்றைய கால கட்டத்தில் வாழ்வதற்குப் போதுமான வருமானமின்றி நாம் ஒவ்வொருவரும் கடனாளிகளாக மாறியுள்ளோம்.

இந்நிலையில் தருவதாக உறுதியளித்த வேதனத்தையாவது தருமாறு இந்த அரசிடம் கேட்கிறோம்.



இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்
CEYON TAMIL TEACHERS’ UNION
392. நாவலர் வீதி . அரியாலை. யாழ்ப்பாணம். 392 .Navalar Road, Ariyalai. Jaffna.
(Reg.NO:REGD:NO:5001)Email:tamilteachers@gmail.com Web:www.tamilteachers.com
FB: இலங்கைத் தமிழர ஆசிரியர் சங்கம்

25.06.2024.

அனைத்து அதிபர்களுக்கும், ஆசியர்களுக்கும்.

சம்பள உயர்ச்சிக்காக ஒருநாள் விடுமுறையை அறிவிப்போம்.

அதிபர்கள் ஆசிரியர்களின் வேதன முரண்பாடுகளைத் தீர்ப்பதற்காக 1998 ஆம் ஆண்டுமுதல் மாறி மாறி வருகின்ற ஆட்சியாளர்களிடம் சம்பள முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளைக் கையளித்தோம். ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் தீர்ப்பதாக வாக்குறுதியளித்து பின்னர் ஏமாற்றப்பட்டோம்.

இது காலம் காலமாகத் தொடர்கின்றது. இன்றைய கால கட்டத்தில் வாழ்வதற்குப் போதுமான வருமானமின்றி நாம் ஒவ்வொருவரும் கடனாளிகளாக மாறியுள்ளோம்.

இந்நிலையில் தருவதாக உறுதியளித்த வேதனத்தையாவது தருமாறு இந்த அரசிடம் கேட்கிறோம்.

நீண்டகாலமாக மாணவர்களின் நலன்களிலும், அவர்களின் கல்வியிலும் எத்தகைய பாதிப்புகளும் ஏற்படாதவகையில் எமது அதிபர்கள், ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் செய்துவரும் சேவைக்கு மதிப்பளித்து, சம்பள அதிகரிப்பை வழங்குமாறு நாளை புதன்கிழமை (26.06.2024) நடைபெறும் ஒருநாள் பணிப்பகிஸ்கரிப்பில் அனைவரும் கலந்துகொள்வோம். இது ஒவ்வொரு அதிபர், ஆசிரியரினதும் தனிப்பட்ட நியாயமான கோரிக்கை. இதனை நாம் அனைவரும் ஒருமித்து, ஒன்றுபட்டு அரசிற்கு எடுத்துரைப்போம்.

மிக்க நன்றி.

தொழிற் சங்கப் பணிக்காக,

சி. சசிதரன்.
நிர்வாகச் செயலாளர்.
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்
Administrative Secretary
Ceylon Tamil Teachers' Union

நீண்டகாலமாக மாணவர்களின் நலன்களிலும், அவர்களின் கல்வியிலும் எத்தகைய பாதிப்புகளும் ஏற்படாதவகையில் எமது அதிபர்கள், ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் செய்துவரும் சேவைக்கு மதிப்பளித்து, சம்பள அதிகரிப்பை வழங்குமாறு புதன்கிழமை (26) நடைபெறும் ஒருநாள் பணிப்பகிஷ்கரிப்பில் அனைவரும் கலந்துகொள்வோம். இது ஒவ்வொரு அதிபர், ஆசிரியரினதும் தனிப்பட்ட நியாயமான கோரிக்கை. இதனை நாம் அனைவரும் ஒருமித்து, ஒன்றுபட்டு அரசிற்கு எடுத்துரைப்போம் – என்றுள்ளது.



# அரபிக்கடல் பிராந்தியத்திற்குச் செல்ல வேண்டாம் இலங்கைக் கடற்றொழிலாளர்களுக்கு எச்சரிக்கை

மறு அறிவித்தல் வரை அரபிக்கடல் பிராந்தியத்திற்கு செல்ல வேண்டாம் என கடற்றொழிலாளர்களுக்கும் கடல்சார் ஊழியர்களுக்கும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பலத்த காற்று மற்றும் கடல் கொந்தளிப்பு குறித்து வளிமண்டலவியல் திணைக்களத்தினால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

தென்மேற்கு பருவப்பெயர்ச்சி மழையின் தீவிரம் காரணமாக அரபிக்கடற் பரப்பில் பலத்த காற்று வீசுவதுடன், கடற்பிராந்தியம் மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இதனால், மேற்படி கடற்பிரதேசங்களில்தற்போது மீன்பிடிநடவடிக்கைகளில் ஈடுபடும் மீனவர்களை உடனடியாக கரை திரும்புமாறும் அல்லது பாதுகாப்பான இடத்திற்கு செல்லுமாறும் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

சில பிரதேசங்களில் மணித்தியாலத்திற்கு 65 முதல் 75 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் 100 மில்லி மீற்றர் வரை மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

அத்துடன், மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளிலும் வடக்கு, வட மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை, ஹம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் இடைக்கிடையே மணித்தியாலத்திற்கு 40 முதல் 50 கிலோ மீற்றர் வரை காற்று வீசக்கூடும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.



# விஜேதாஸ ராஜபக்ஷவிற்கு எதிரான இடைக்காலத் தடை மீண்டும் நீடிப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தவிசாளராகவும் கட்சி உறுப்பினராகவும் செயற்படுவதற்கு அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவிற்கு விதிக்கப்பட்ட இடைக்காலத் தடையுத்தரவு நேற்று மீண்டும் நீடிக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளர், அமைச்சர் லசந்த அழகியவண்ண தாக்கல் செய்த மனுவை நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட போதே கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

பிரதிவாதிகளுக்கு ஆட்சேபனை தாக்கல் செய்வதற்கும் கால அவகாசம் வழங்குவதற்கு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இதற்கிணங்க, எதிர்வரும் ஜூலை 9 ஆம் திகதி மனுவை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# இருதரப்புக் கடன் மறுசீரமைப்புக்கான உடன்படிக்கை இன்று கைச்சாத்தாகும்

கடன் மறுசீரமைப்பு தொடர்பான இருதரப்பு உடன்படிக்கை இன்று கைச்சாத்திடப்படவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார்.

அமைச்சரவைப் பேச்சாளர், அமைச்சர் பந்துல குணவர்தன இது தொடர்பில் நேற்று விளக்கமளித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“கடன் மறுசீரமைப்பு தொடர்பில் விரிவான விளக்கம் ஜனாதிபதியினால் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டது. அது தொடர்பான உடன்படிக்கையில் இன்று கைச்சாத்திடு வதற்காக பாரிஸ் கழகத்தின் அதிகாரிகளை சந்திப்பதற்காக நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் திறைசேரியின் பிரதானி இராஜாங்க அமைச்சர்கள் உள்ளிட்ட இலங்கையை பிரதி நிதித்துவப்படுத்தும் குழுவினர் அனுப்பி வைக்கப்பட்டுள் ளனர்.



கைச்சாத்திடப்படவுள்ள உடன்படிக்கைகள் தொடர்பில் அனைத்து விடயங்களும் இலங்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பவுள்ளன. அது தொடர்பில் நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி உரை நிகழ்த்தவுள்ளார்.”– என்றார்.

# ஆரம்ப சுகாதார சேவையை மேம்படுத்துவதற்கு உலக வங்கியிடமிருந்து 150 மில்லியன் டொலர்

இலங்கையின் ஆரம்ப சுகாதார சேவையை மேம்படுத்துவதற்காக உலக வங்கி 150 மில்லியன் டொலரை வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது.

இந்தத் தொகையை வழங்குவதற்கு அதன் நிர்வாகக் குழு அனுமதி வழங்கியுள்ளதாக உலக வங்கி அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட இந்தத் திட்டத்திற்கு ‘இலங்கை ஆரம்ப சுகாதார சேவைகள் மேம்பாட்டு திட்டம்’ எனப் பெயரிடப்பட்டுள்ளது.

மாவட்ட மருத்துவமனைகள், மத்திய மருந்தகங்கள், பல் மருத்துவ கிளினிக் மற்றும் சுகாதார மருத்துவ அதிகாரிகளின் அலுவலகங்கள் போன்றன இதில் உள்ளடங்குகின்றன.

THE WORLD BANK

மேற்படி நிறுவனங்களில் சிகிச்சையின் தரத்தை மேம்படுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

இதனூடாக நாடு முழுவதும் காணப்படுகின்ற ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆரம்ப மருத்துவ சேவை நிறுவனங்கள் பயனடையவுள்ளன.



# ஜூலை மாதம் 2 ஆம் திகதி விசேட நாடாளுமன்ற அமர்வு

எதிர்வரும் ஜூலை மாதம் 2ஆம் திகதி விசேட நாடாளுமன்ற அமர்வு இடம்பெறவுள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்தன, சபாநாயகரிடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக இந்த அமர்வை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

பெரும்பாலும் சர்வதேச நாணய நிதியம் தொடர்பான விடயங்கள் இந்த அமர்வின் போது விவாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# பொசன் சேவையால் இ.போ. சபையின் வருமானம் உயர்வு

கடந்த 20 ஆம் மற்றும் 21 ஆம் திகதிகளில் இலங்கை போக்குவரத்துச் சபை அதிகரித்த வருமானத்தை ஈட்டியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் லலித் டி அல்விஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த 20 ஆம் திகதி 29 மில்லியன் ரூபா வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது.

கடந்த 21 ஆம் திகதி 35.8 மில்லியன் ரூபா வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது.

பொசன் பூரணைத் தினத்தை முன்னிட்டு அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை பகுதிகளுக்கு நடத்தப்பட்ட விசேட பஸ் சேவையின் மூலம் இந்த வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைவர் லலித் டி அல்விஸ் தெரிவித்துள்ளார்.





# போரா மாநாட்டை வெற்றிகரமாக நடத்த அரசாங்கம் முழு ஆதரவினை வழங்கும்!

## சாகல ரத்நாயக்க உறுதி தெரிவிப்பு

இலங்கையில் நடத்தப்படவிருக்கும் போரா சமூகத்தின் வருடாந்த ஆன்மீக மாநாட்டை வெற்றிகரமகா நடத்துவதற்கு தேவையான முழுமையான ஆதரவை வழங்குமாறு தேசிய பாதுகாப்புத் தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.



போரா மாநாடு தொடர்பில் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே சாகல ரத்நாயக்க இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

இந்த ஆண்டு பாகிஸ்தானின் கராச்சியில் நடைபெறவுள்ள போரா சமூகத்தின் ஆன்மீக மாநாட்டுடன் இணையான போரா ஆன்மீக மாநாடு ஜுலை 7- 16 ஆம் திகதி வரை பம்பலப்பிட்டி போரா பள்ளிவாசல் மற்றும் இலங்கை கண்காட்சி மற்றும் மாநாட்டு மண்டபத்தை மையமாகக் கொண்டு நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டிற்காக இந்தியா உள்ளிட்ட பல நாடுகளில் இருந்து சுமார் 15 ஆயிரம் போரா சமூகத்தினர் இலங்கைக்கு வரவிருக்கின்றம்சியால், அவர்களுக்கான விமான நிலைய வசதிகள் உள்ளிட்ட அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளையும் பெற்றுக் கொடுப்பது குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இந்தச் சந்திப்பில், வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, பாதுகாப்பு பதவிநிலை பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, இலங்கை சுங்கம், குடிவரவு திணைக்களம், கொழும்பு மாநகர சபை, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம், இலங்கை பொலிஸ், முஸ்லிம் சமய விவகார திணைக்களம் உள்ளிட்ட பல நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.







# இன்றைய ராசி பலன்கள் - 26.06.2024

## மேஷம்

இன்று மிகவும் சிறப்பான நாள். உங்களிடம் காணப்படும் உறுதி மற்றும் தைரியம் காரணமாக வெற்றியும் திருப்தியும் அடையலாம்.

இன்று நீங்கள் தன்னிச்சையாகப் பணி புரிந்து பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் நேர்மையாக வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக காணப்படும். இதனால் மகிழ்ச்சியும் திருப்தியும் நிறைந்திருக்கும்.

இன்றுநீங்கள் ஆற்றலுடனும் முழு ஆரோக்கியத்துடனும் காணப்படுவீர்கள்.

## ரிஷபம்

இன்றைய நாள் இயந்திர கதியில் இயங்கும். இது உங்கள் வளர்ச்சியை பாதிக்கும். இன்றைய சவால்களை சந்திக்க நீங்கள் திட்டமிட்டு செயல் பட வேண்டும்.

பணியில் வளர்ச்சி சிறப்பாக காணப்படாது.பணிகள் அதிகமாக காணப்படும். அதற்கேற்றபடி திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

இன்று உங்கள் துணையுடன் நல்லுறவை வளர்க்க இயலாது. குடும்ப பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடனான உறவில் மகிழ்ச்சி குறைந்து காணப்படும்.

பொறுப்புகள் அதிகம் இருப்பதால் தேவையற்ற செலவுகள் காணப்படும். எனவே பணத்தை சாதுரியமாக செலவு செய்ய வேண்டும்.

இன்று தோல் எரிச்சலால் பாதிப்பு காணப்படும். ஆரோக்கியத்தில் கவனம் வைப்பது நல்லது.

## மிதுனம்

இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. இன்று சிறிய விஷயங்களுக்குக் கூட எளிதில் உணர்ச்சிவசபடுவீர்கள். இன்று மனதில் சமநிலையோடு இருங்கள். இனிய இசை கேட்பதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

இன்று பணிகள் கடினமாக காணப்படும். நிலுவையில் உள்ள பணிகளை திறமையாகக் கையாண்டு குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க வேண்டும்.

உங்கள் துணையிடம் வேறுபாட்டை வெளிப்படுத்துவீர்கள். உரையாடலின் போது கவனம் தேவை.

குடும்ப பொறுப்புகள் அதிகரிக்கும் காரணத்தால் பணம் செலவாகும்.அதிகரிக்கும் செலவுகளை சுமையாக உணர்வீர்கள்.

இன்று சளி, இருமல் பாதிப்பு காணப்படும்.

## கடகம்

இன்று உங்களுக்கு அனுகூலமான பலன்கள் கிடைக்கும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். இன்று அதிர்ஷ்டம் சிறந்த பலனைத் தரும்.

பணியில் முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.

நீங்களும் உங்கள் துணையும் வெளியிடங்களுக்கு சென்று மகிழ்வீர்கள். இதன் மூலம் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு

நிதிநிலையில் ஸ்திரத்தன்மை காணப்படும். கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

உங்களின் தேக ஆரோக்கியம் மற்றும் ஆற்றல் காரணமாக இன்று சிறப்பான ஆரோக்கியம் காணப்படும்.

## சிம்மம்

இன்று உங்களுக்கு அனுகூலமான நாள். நிறைய வாய்ப்புகள் காணப்படும். இன்றைய நாளை சிறந்த முறையில் பயன்படுத்திக்கொள்ளுங்கள். இன்று திருப்தி நிறைந்து காணப்படும்.

நீங்கள் மிகுந்த அர்ப்பணிப்புடன் பணியாற்றுவீர்கள். கடினமான பணிகளைக் கூட எளிதாகச் செய்து உங்கள் முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் திருப்தியாக உணர்வீர்கள். இருவரும் தரமான நேரத்தை இணைந்து செலவழிப்பீர்கள்.

இன்று நிதி வளர்ச்சி சீராக இருக்கும். குடும்ப நலத்திற்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று திடமாகவும் வலிமையாகவும் காணப்படுவீர்கள். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## கன்னி

உங்கள் மனதில் அவநம்பிக்கை உணர்வு காணப்படும். இந்தப் போக்கை நீங்கள் சமாளிக்க வேண்டும். கடினமான சூழ்நிலை காரணமாக இன்று சுமையான நாளாக உணர்வீர்கள்.

இன்று பணியிடத்தில் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமைய கவனமாகப் பணியாற்ற வேண்டும். சிறப்பாக திட்டமிடுவதன் வெற்றி சாத்தியப்படும்.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் ஆரோக்கியமான உறவு முறை காணப்படும்.

இன்று பணவரவு சிறப்பாக இருக்கும். இன்று அதிர்ஷ்டம் காரணமாக பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று கண் எரிச்சல், முதுகுவலி, மற்றும் கால் வலி போன்ற பாதிப்புகள் ஏற்படலாம்.

## துலாம்

இன்று கடினமான சூழ்நிலை காணப்படும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ளவேண்டும். உங்கள் முயற்சி மற்றும் சிறப்பாக திட்டமிடுவதன் மூலம் உங்கள் இலக்குகளை அடையலாம்.

பணியிடத்தில் பதற்றமான சூழ்நிலை காணப்படும். பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க திட்டமிட்டு பணியாற்ற வேண்டும். சிறந்த பலனைக் காண நீங்கள் அதிக முயற்சி எடுக்க வேண்டும்.

தவறான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் பிரச்சினை ஏற்படலாம். இருவரும் ஒருவர் கருத்தை மற்றவர் புரிந்துகொள்ள தவறுவீர்கள்.

இன்று பண இழப்பு ஏற்படலாம். எனவே பணத்தை கவனமாக கையாள வேண்டும்.

## விருச்சிகம்

இன்று வருத்தத்துடன் காணப்படுவீர்கள். உணர்ச்சி வசப்படக் கூடிய நிலை இருப்பதால் அமைதியாக இருப்பது நல்லது. சமாளித்து அமைதியாக இருக்க வேண்டும். இசை கேட்பதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

சவாலான பணிகள் காணப்படுவதால் ஓய்வெடுக்க நேரம் காணாது. எனவே திட்டமிட்டு உங்கள் பணிகளை ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் பேசும் போது உணர்ச்சிவசப்படுவீர்கள். உறவில் நல்லிணக்கம் உருவாக இத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று குடும்பத் தேவைக்காக பணம் செலவு செய்வீர்கள். பொறுப்புகள் அதிகம் காணப்படுவதால் செலவுகள் அதிகமாக இருக்கும்.

ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது.

# இன்றைய ராசி பலன்கள் - 26.06.2024

## தனுசு

இன்று உங்கள் இலக்குகளை அடைவதில் வெற்றி பெறுவீர்கள். முக்கிய முடிவுகள் நல்ல பலன் தரும். நீங்கள் இன்று நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் செயல்திறனில் திறமையை வெளிபடுத்துவீர்கள். உங்கள் திறமை மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். சிறிய அளவிலான கடன் வாங்குவீர்கள்.

உங்களிடம் இன்று ஆற்றல் நிறைந்து காணப்படும். உங்கள் ஆரோக்கியத்தை சிறப்பாக பராமரிப்பீர்கள்.

## மகரம்

இன்றைய கடினமான சூழ்நிலையை சமாளிக்க உங்களுக்கு பொறுமை தேவை. எந்தவித இழப்பும் ஏற்படாத வகையில் திட்டமிட வேண்டும். இன்று உறுதியான அணுகுமுறை தேவை.

பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. உங்கள் செயல்களில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு மிகுந்த கவலையை உண்டாக்கும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். மகிழ்ச்சியை தக்க வைக்க உங்கள் துணையுடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பயணத்தின்போது பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று கால் வலியால் அவதிப்பட நேரலாம். தியானம் மற்றும் யோகா மேற்கொள்வது சிறந்தது.

## கும்பம்

இன்று நீங்கள் அதிகம் எதிர்பார்க்க இயலாது. என்றாலும் நம்பிக்கையுடன் செயல்படுங்கள். நேர்மறை கண்ணோட்டம் இன்று மிகவும் அவசியம்.

நீங்கள் வெற்றி பெறுவதற்கு கடுமையாக உழைக்க வேண்டும். உங்கள் பணிகளில் தாமதங்களை சந்திப்பீர்கள். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

உங்கள் துணையிடம் பேசும் போது உணர்ச்சி வசப்படுவீர்கள். உறவில் நல்லிணக்கம் உருவாக இத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று நிதிநிலை சிறப்பாக காணப்படாது. இன்று செலவுகள் அதிகமாக இருக்கும். பணத்தை சேமிக்க இயலாது.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரலாம். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

## மீனம்

இன்று உங்களுக்கு அனுகூலமான நாளாக இருக்கக் காண்பீர்கள். உங்கள் இலக்குகளை நம்பிக்கையுடன் அமைத்துக் கொள்வீர்கள். உங்கள் நண்பர்கள் மற்றும் நெருங்கியவர்களிடம் நல்ல உறவு முறையைப் பராமரிப்பீர்கள்.

உங்கள் சக பணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

இன்று இனிமையான நாளாக உணர்வீர்கள். உங்கள் துணையுடன் நட்பாக நடந்து கொள்வீர்கள்.

இன்று பண வரவு அதிகமாக இருக்கும். இன்று அதிர்ஷ்டம் காரணமாக உங்கள் சேமிப்பு உயரும்.

இன்று உங்களிடம் நம்பிக்கை உணர்வு நிறைந்து காணப்படும். இதனால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.



